927

பிறர் உதவியின்றி தாமாகவே

ஹிந்துஸ்தானி கற்று பேசும்படியான

# ஹிந்தி பாஷா போதினி.



"ஹிந்தி பாஷையே தேசிய பாஷையாக வழங்கவேண்டும்" - மஹாத்மா.

வெள்ளறம்

K. நட்டார், அவர்களால்

இயற்றப்பெற்றது.

(முதல் பதிப்பு)

1932. [விலை அணா 4.

P152-31
N32
170850

பிறர் உதவியின்றி தாமாகவே

ஹிந்துஸ்தானி கற்று பேசும்படியான

# ஹிந்தி பாஷா போதினி



ஞானோதயக் கீர்த்தனை, பக்திரசக்கீர்த்தனை, மனத்திடங்கூற்-
வெண்பா முதலியவைகளின் நூலாசிரியரும்,
உலக ஊழியன் பத்திரிகாசிரியரும்
ஆகிய

K. நட்டார் அவர்கள்

இயற்றியது.

---

ரிஜிஸ்டர் செய்தது]  [விலை அணா 4

# முன்னுரை.

நம் தேசத்தில் பல்வேறு பாஷைகள் வழங்கிவரினும் அவைகளுள் தலைசிறந்து விளங்குவதும், கோடானுகோடி ஜனங்களால் பேசப்படுவதும், வியாபாரம், கைத்தொழில் யாத்திராமார்க்கம் முதலிய எல்லா வசதிகளுக்கும் ஏற்றதா யிருப்பதும் ஹிந்தி அல்லது ஹிந்துஸ்தானியே யாகும். இக்காரணம் பற்றியே நம் தேசத் தலைவர்களால் இப்பாஷையை நம் இந்தியாவின் பொதுப் பாஷையாகத் தீர்மானிக்கப்பெற்று, ஏனைய பாஷையினர்கள் எல்லோரும் இதை நன்கு கற்றுக்கொள்ளும்படி எல்லா இடங்களிலும் ஹிந்திப் பிரசாரம் செய்யப்பட்டு வருகின்றன; ஆனால், அநேகர் எளிதில் பேசக் கற்றுக்கொள்ளுமாறு தமிழ் எழுத்துக்களினால் எழுதி வெளியிடும்படி கேட்டுக்கொண்டதற்கிணங்க இப் புத்தகத்தை வெளியிடலானோம். இதில் ஏதேனும் குறைகள் ஏற்பட்டபோதிலும் ஹிந்தி பாஷையின் பிரவாகத்தை ஜனங்களுக்குள் பரவச்செய்து அவர்களுக்கு இப்பாஷாபிமானத்தை உண்டு பண்ணுமென நம்புகிறோம்.

இப்புஸ்தகத்தை சாதாரண ஜனங்களும் கற்றுணர வேண்டுமென்னும் நோக்கத்துடன் தமிழ் இலக்கணப் பெயர்களுக்கு சில திரிபான பெயர்கள் கொடுக்கப் பெற்றிருக்கின்றன, அதாவது வினைச்சொற்களோடும், ஏனைய சொற்களோடும் சேர்க்கப்படுகிற இலக்கணப் பெயர்ச் சொற்களை சிற்சில இடங்களில் விதிஎன்றே கூறப்பெற்றிருக்கின்றன. ஒவ்வொரு விபரத்திற்கும் தமிழிலுள்ள விபரங்களை எடுத்துக்காட்டி அதற்குச் சரியான ஹிந்தி விதியின் விபரங்களை தெளிவு படுத்தப் பட்டிருக்கிறது. ஹிந்தி எழுத்துக்களினால் இப்பாஷையை படிப்பவர்களும் இதை ஒருமுறை படிப்பார்களேயானால் அவர்களுக்கு இப்பாஷையிலுள்ள சந்தேகங்கள் நிவிர்த்தியாகும். அதனால், எல்லா சகோதர சகோதரிகளும் இப்புஸ்தகத்தைப் படித்துணரவேண்டுமென நினைப்பூட்டுகிறோம்.

K. N.

991
491.43948

991
4394811
p142-31

# எழுத்துக்களின் உச்சரிப்பு.

இந்தியாவில் தொன்றுதொட்டு வழங்கி வருகின்ற பல் வேறு பாஷைகளில், நம் தமிழ் பாஷையைத் தவிர மற்றெல்லாப் பாஷைகளின் எழுத்துக்களினாலும் ஹிந்துஸ்தானியை கூடிய வரை உச்சாரபேதமின்றி யெழுதித் தெரிந்து கொள்ளலாம். ஆனால், நம் தமிழ் பாஷையில் மாத்திரம் அவ்வாறுதெரிந்துகொள் வது கடினம். ஏனெனில், ஹிந்திப் பாஷையின் உச்சார தொனி யுள்ள எழுத்துக்கள் மற்றப் பாஷைகளில் அமைந்திருப்பது போல் நத்தமிழ் பாஷையில் அமையவில்லை. ஆகையினால், தமிழ் எழுத்துக்களினால் உச்சரிக்கக்கூடாத ஹிந்தி யெழுத்துக்களின் உச்சரிப்புகளை நன்கு விளக்கிக் காட்டும்படி நம் தமிழ் எழுத்துக் கள் சிலவற்றுடன்சிற்சில அடையாளங்கள்சேர்க்கவேண்டியிருக் கின்றன. இந்த அடையாளங்கள் க, ச, ட, த, ப, என்னும் 5 வல்லின எழுத்துக்களின் இனங்களுக்கு மட்டுந்தான் வரும். வேறு சிலவற்றிற்கு தமிழில் கலந்து வருகின்ற வடமொழி எழுத் துக்களே போதியதாகும். அவ்வடமொழி எழுத்துக்கள் எவை யெனின்? ஜ, ஷ, ஸ, ஹ, க்ஷ, என்பவைகளே.

க, ச, ட, த, ப என்னும் வல்லின எழுத்துக்கள் ஒவ்வொன் றிற்கும் ஹிந்தியில் நான்கு நான்கு எழுத்துக்கள் அமைந்திருக் கின்றன. அதில், முதல் எழுத்துக்கள் நம் தமிழ் எழுத்துக்களைப் போன்ற உச்சரிப்புடையவைகளே. அதனால், அவைகளைத்தவிர மற்றவைகளுக்கு, அவைகளின் உச்சரிப்புகளுக்கேற்ப 2, 3, 4, என்னும் அடையாளங்கள் சேர்க்கப் பட்டிருக்கும். எவ்வா றெனின்? க, 2க, 3க, 4க, யெனவிருக்கும். இம்மாதிரியே

ச,ட,த,ப, என்பவைகளுக்கும் அடையாள நம்பர்கள் சேர்க்கப் பட்டிருக்கும். இந்த நம்பர் அடையாளங்களைக் கண்டு அவை களின் உச்சரிப்பு தவாறாது உச்சரிக்கவேண்டும்.

உச்சரிப்புகளை நன்கு தெரிந்து உச்சரிப்பதற்கு இன்னும் ஒரு நல்ல வழியிருக்கின்றது. அஃதெப்படியெனில்? க, ச, ட த, ப, என்பவைகளின் முதல் எழுத்துக்கள் தமிழ் எழுத்துக் களின் உச்சரிப்புடையதாயிருப்பதால் அவைகளைத்தவிர, 2வது நம்பருடைய எழுத்துக்களை *உள் நாக்கினுலும், 3வது நம்ப ருடைய எழுத்துக்களை தொண்டையினுலும், 4வது நம்பருடைய எழுத்துக்களை உந்தியினுலும் உச்சரிக்கவேண்டும். இம்முறை அயல்பாஷை அனுபவமுள்ளவர்களுக்கு நன்கு தெரிந்திருக்கும், இப் பாஷையைப் படிக்கும்போதும் பேசும்போதும் மெய் யெழுத்து இரட்டிக்க வேண்டும். அதாவது, ஜாதாஹை என எழுதியிருந்தால் அதைச் ‡ஜாத்தாஹைஎன உச்சரிக்கவேண்டும்: இப்படிப் பேசினுல்தான் தமிழ் ஜனங்களுடைய உச்சரிப்பிற்கு ஹிந்திப் பாஷை பொருத்தமாயிருக்கும். இன்னும் உச்சரிப்பை தெளிவு படுத்த வேண்டுமானுல் இப் புத்தகம் இடந்தாரது. ஆகையால் மேற்கூறிய முறைகளே போதுமானது. அதில் கொஞ்சம் உச்சாரபேதம் எற்பட்டபோதினும் பாஷை குற்றமாகி விடாது. பேசினுல் வடஇந்தியர்களுக்கு விளங்காமலும் போய் விடாது. ஆகையினுல், தைரியத்தை விடாது இப்புத்தகத்தை நன்கு படித்து, ஹிந்தி அல்லது ஹிந்துஸ்தானியை பேசிப்பழக நந்தமிழ்நாட்டு சகோதர சகோதரிகள் அனைவரும் முன் வருவார்களாக.

ஆக்கியோன்.

*காரல் சப்தம். ‡இடத்திற்கேற்ப கூட்டியும் குறைத்தும் உச்சரிக்கவேண்டும்.

# 1-வது பாடம்.

## 1-முதலாவது மனப்பாடம் செய்யவேண்டிய சொற்கள்.

4கர்—வீடு

4கோ3டா—குதிரை

3பா3ச்—தோட்டம்

ஆ3த்மி—மனிதன்

மஹல்—அரண்மனை

சத்ரி—குடை

3பைல்—மாடு

தாலா3ப்—குளம்

3துனியா—உலகம்

ஸஹர்—நகரம்

3காய்—பசு

பத்தர்—கல்

ஜங்கல்—காடு

லோ3க்—ஜனங்கள்

ஊக்—கரும்பு

3காடி—வண்டி

ஆ3க்—நெருப்பு

3தின்—தினம்

பானி—தண்ணீர்

நாரியல்—தேங்காய்

ஜான்வர்—மிருகம்

## 2. சில வினைச்சொற்கள்

ஆ—வா

பீ—குடி

லே—எடு

3பை2ட்—உட்காரு

ரஹ்—வசி

ரக்—வை

ஜா—போ

மார்—அடி

கஹ்—சொல்லு

லி2க்—எழுது

மாப்—அள

ஸீக்—கற்றுக்கொள்

கர்—செய்

3தே3க்—பார்

3புலா—கூப்பிடு

4பேஜ்—அனுப்பு

உதர்—இறங்கு

3கரீந்—வாங்கு

ஸோ—தூங்கு

ச4ட்—ஏறு

லா—கொண்டுவா

4பூல்—மறந்துவிடு

| | |
|---|---|
| 3தௌட்—ஓடு | நிகல்—புறப்படு |
| 3போல்—பேசு | சோட்—விடு |
| 3தோல்—நிறு | சல்—நட |
| ஸுன்—கேள் | ஸோச்—யோசி |
| உ2ட்—எழுந்திரு | 3டால்—போடு |
| 2கா—சாப்பிடு | ச2க்—ருசிபார் |
| 3தே—கொடு | ரோ—அழு |

## 3. சில பெயர்ச் சொற்கள்

| | |
|---|---|
| காம்—வேலை | ஜமீன்—தரை |
| உஜாலா—வெளிச்சம் | தேல்—எண்ணை |
| ராத்—இரவு | ஹவா—காற்று |
| நாம்—பெயர் | வக்த—சமயம் |
| அந்4தேரா—இருட்டு | 2கானா—சாப்பாடு |
| 3தின்—பகல் | மிட்டி—மண் |
| சாவல்—அரிசி | குத்தா—நாய் |
| 4தூப்—வெயில் | 3தூ4த்—பால் |
| குவாங்—கிணறு | சடக்—பாதை |
| 3தால்—பருப்பு | மோர்—மயில் |
| சாயா—நிழல் | |

## 4. சில கேள்வி வார்த்தைகள்

| | |
|---|---|
| க்யா—என்ன | கைஸா—எப்படி |
| உத்னா—அவ்வளவு | வைஸா—அப்படி |
| இ4தர்—இங்கு | ஆஜ்—இன்று |
| கௌன்—யார் | கித்னா—எவ்வளவு |
| இத்னா—இவ்வளவு | அ3ப்—இப்பொழுது |

| | |
|---|---|
| உ4தர்—அங்கு | கல்—நேற்று |
| க3ப்—எப்பொழுது | க்யோங்—ஏன் |
| ஐஸா—இப்படி | த3ப்—அப்பொழுது |
| கி4தர்—எங்கு | 3பஹுத்—மிகவும் |

## 5. சில வினையெச்சச் சொற்கள்

| | |
|---|---|
| ஹாங்—ஆம் | வஹாங்—அங்கே |
| மாலும்—தெரியும் | பிர்—மறுபடியும் |
| 3பாஹர்—வெளியே | 3தே3ர்—தாமதம் |
| நஹீங்—இல்லை | யஹாங்—இங்கே |
| 3பஸ்—போதும் | ரோஜ்—தினந்தோறும் |
| 4பீதர்—உள்ளே | 4பே4த்—இரகசியம் |
| கூ3ப்—நன்றாய் | கம்—குறைவு |
| ஹமேஸா—எப்பொழுதும் | டீக்—சரியாய் |
| பாஸ்—கிட்ட | ஜுமாலா—வாக்கியம் |

## 6. சில பெயரெச்சச் சொற்கள்

| | |
|---|---|
| யஹ்—இது, இந்த | மோடா—பருமனை |
| 3புரா—கெட்ட | லம்3பா—நீளமான |
| டண்டா—குளிர்ச்சியான | நாடா—குட்டையான |
| அச்சா—நல்ல | பத்லா—மெலிந்த |
| 2சோடா—சிறிய | மைலா—அழுக்கான |
| கடுவா—கசப்பான | மீடா—தித்திப்பான |
| 3ப3டா—பெரிய | 3தேஜ்—கூர்மையான |
| சௌடா—அகலமான | |

## 7. இன்னுஞ் சில சொற்கள்

| | |
|---|---|
| தக்—வரையில் | ஸாயத்—ஒருவேளை |

முதா3பிக்—பிரகாரம்
ல3க்4ப3க்—ஏறக்குறைய
ஜரூர்—அவசியம்
3பார்3பார்--அடிக்கடி
கிலாவ்ப்—விரோதமாக
ஆஜ்கல்—தற்காலம்
ஜரூர்—கட்டாயமாக
அ2க்ஸர்—சாதாரணமாய்

## 8. மூவிடப் பெயர்கள்

மை—நான்
ஹம்—நாங்கள்
தூ—நீ
தும்—நீர்,
ஆப்—தாங்கள்
வஹ-அவன், அவள், அது, அந்த,
வே—அவர்கள், அவைகள்
யே—இவர்கள், இவைகள்

குறிப்பு:— மேலே எழுதியிருக்கும் ஹிந்தி சொற்கள் ஒவ்வொன்றையும் அவைகளுக்குரிய தமிழ் அருத்தங்களோடு நன்றாய் மனப்பாடம் செய்துகொள்ளவேண்டும். அவைகளைச் சரியாய் மனப்பாடம் செய்யாவிட்டால் கீழே தெரிவிக்கும் விபரம் ஒன்றும் புரியாது. அதனால், முதல் பாடத்தில் எழுதியிருக்கும் வார்த்தைகளை தெளிவாய் மனதில் பாடம் செய்துகொண்டு அடுத்ததைக் கவனிக்கவும்.

## 2-வது பாடம்

### கட்டளைச்சொல்

1 நம் முன்னிலையில் உள்ளவர்களை அவர்கள் வயதுக்கேற்ப, நீ, நீர், நீங்கள் என மூன்று பிரிவாய்ப் பேசுகிறோம். நாம் இங்கு எடுத்துக்கொண்ட கட்டளையாகிய ஏவல்சொற்களை இந்த மூன்று பேருக்குத்தான் உபயோகிக்கக்கூடும். தமிழில் இயற்கையான வினைச் சொற்களே நீ என்பதோடு, நீ வா, நீ போ, நீ கூப்பிடு என எப்படி கட்டளையாகுகின்றதோ அப்படியே ஹிந்தியிலும்

இயற்கையான வினைச்சொற்களே தூ என்பதின் கட்டளையாகின்றன. உதாரணம்:— தூ ஆ, தூ ஜா, தூ 3புலா இதன் அருத்தம் நீ வா, நீ போ, நீ கூப்பிடு என்பதே. தூ என்பதோடு கட்டளையில் எல்லா வினைச் சொற்களையும் இப்படியே உபயோகிக்க வேண்டும்.

2 தமிழில் நீர் என்பதற்கு எவலில் ஒவ்வொரு வினைச்சொற்களோடும் உம் என்பது சேர்ந்து, நீர் வாரும், நீர் போரும், நீர் கூப்பிடும் என எவ்வாறு பேசப்படுகிறதோ அதுபோல், ஹிந்தியிலும் தும் என்பதற்கு ஒவ்வொரு வினைச் சொற்களோடும் ஓ என்பதைச் சேர்த்து, தும் ஆவோ, தும் ஜாவோ, தும் 3புலாவோ வெனப் பேசப்படுகிறது. இம்மாதிரியே ஒவ்வொரு வினைச் சொற்களோடும் தும் என்பதற்கு கட்டளையில் ஓ சேர்த்துப் பேசவேண்டும். இரண்டு வினைச் சொற்கள் மாத்திரம் இவ்விதிக்கு மாருக வரும். அவை 3தே, லே என்பவைகளே. இவை இரண்டிற்கும் ஓ சேராது. தும் என்பதற்கு கட்டளையில், 3தே என்பது 3தோ எனவும், லே என்பது லோ எனவும் மாறும். உதாரணம்:- தும் ருப்யா 3தோ-நீர் ரூபாய் கொடும். தும கப்3டா லோ நீர் துணி எடும்.

3 தமிழில் நீங்கள் என்பதற்கு ஒவ்வொரு வினைச் சொற்களோடும் கட்டளையில் உங்கள் என்பது சேர்ந்து, நீங்கள் வாருங்கள்; நீங்கள் போங்கள்; நீங்கள் கூப்பிடுங்கள் என எவ்வாறு பேசப்படுகிறதோ அதற்கு ஹிந்தியில் ஆப் என்பதற்கு ஒவ்வொரு வினைச் சொற்களோடும் இயே சேர்த்து ஆப் ஆயியே, ஆப் ஜாயியே, ஆப் 3புலாயியே எனப் பேசப்படுகிறது. 4 வினைச்சொற்கள் மட்டும் இவ்விதிக்கு மாருக வரும். அவை, 3தே, லே, கர், பீ என்பவைகளே. இவைகள் நான்கும் ஆப் என்பதின் கட்டளை

யாகும்போது 3தே, என்பது 3தீஜியே எனவும், லே என்பது லீஜியே எனவும், கர் என்பது கீஜியே எனவும், பீ என்பது பீஜியே எனவும் வரும். உதாரணம்:- ஆப் ருப்யா 3தீஜியே-தாங்கள் ரூபாய் கொடுங்கள். ஆப் மிட்டி லீஜியே- தாங்கள் மண் எடுங்கள் ஆப் காம் கீஜியே-தாங்கள் வேலை செய்யுங்கள். ஆப் பானி பீஜியே-தாங்கள் தண்ணீர் குடியுங்கள். இந்த 4வினைச்சொற்களைத்தவிர மற்றவையெல்லாம் இயே என்னும் விதி சேர்ந்தே முடியும்.

4 ஏவல் சொற்களை மறுக்க வேண்டுமானல் அதாவது, போ என்பதை போகாதே எனவும்; போரும் என்பதை போகாதீர் எனவும்; போங்கள் என்பதை போகாதீர்கள் எனவும் ஆக்க வேண்டுமானல், ஹிந்தியில் ஒவ்வொரு ஏவல் சொற்களுக்குமுன்பு மத் என்பதைச் சேர்க்கவேண்டும். உதாரணம்:- தூ ஜா-நீபோ தூ மத்ஜா-நீ போகாதே. தும் ஜாவோ-நீர் போரும்; தும் மத் ஜாவோ-நீர் போகாதீர். ஆப் ஜாயியே—தாங்கள் போங்கள்; ஆப் மத் ஜாயியே—தாங்கள் போகாதீர்கள். இப்படியே மற்றவைகளையும் பேசவேண்டும். கட்டளையில் நீ, நீர், தாங்கள் என்பது தமிழில் எப்படித் தோன்றியும் தோன்றுமலும் வருகின்றதோ அதேமாதிரி ஹிந்தியிலும் வரும். ஜா-போ. ஜாவோ-போரும். ஜாயியே-போங்கள் இப்படியே தூ, தும், ஆப், என்பவைகள் தோன்றுமலும் பேசலாம்.

## சிலமாதிரி ஏவல் வாக்கியங்கள்

| | | | |
|---|---|---|---|
| தூ | 3போல்—பேசு<br>மத்போல்—பேசாதே<br>3தேக்—பார்<br>மத்3தேக்—பாராதே | தும் | 3போலோ-பேசும்<br>மத்போலோ-பேசாதிரும்<br>3தேக்கோ-பாரும்<br>மத்3தேக்கோ-பாராதிரும் |

ஆப் { 3போலியே-பேசுங்கள் / மத் போலியே-பேசாதீர்கள் / 3தேக்கியே-பாருங்கள் / மத் தேக்கியே-பாராதீர்கள் } மற்ற வினைச்சொற்களையும் கட்டளையில் இப்படியே அமைத்துப் பேசவேண்டும்.

## 3-வது பாடம்

### காலங்கள்

காலங்கள் மூன்றுவகைப்படும். அதாவது நிகழ்காலம் இறந்தகாலம் எதிர்காலம் என்பன. இவைகளை இலக்கணப் பெயர்களுடன் எழுதினால் ஹிந்திபாஷையின் விதிமுறைகளை மிகவுஞ் சுருக்கி நன்கு விளக்கி விடலாம். ஆனால், அம்முறை அதிகம் கற்றவர்களுக்குப் புரியுமேயல்லாமல் மற்றவர்களுக்குப் புரிவது கடினம். இதனால் சாதாரணமுறையில் எழுதுகின்றோம்; கொஞ்சம் கருத்தூன்றி இடத்திற்கேற்றவாறு பிரியும் வித்தியாசங்களை நன்கு கவனித்து மனதிற் பதித்துக்கொள்ளவும்.

1 நிகழ்காலம் தமிழில், நான் என்பதற்கு ஒவ்வொரு வினைச் சொற்களோடும் கிறேன் எனவும் நாம் என்பதற்கு கிறோம் எனவும், நீ என்பதற்கு கிறாய் எனவும், நீர் என்பதற்கு கிறீர் எனவும், நீங்கள் என்பதற்கு கிறீர்கள் எனவும், அவன் என்பதற்கு கிறான் எனவும், அவர்கள் என்பதற்கு கிறார்கள் எனவும். அவள் என்பதற்கு கிறாள் எனவும் நிகழ்காலத்தில் வரும். செய் என்னும் வினைச்சொல்லை எடுத்துக்கொள்ளுங்கள் செய்கிறேன் இதில் செய் என்பதோடு கிறேன் என்னும் விதிசேர்ந்து செய்கிறேன் எனவாயிற்று; செய் என்பதோடு கிறோம் என்பதைச் சேர்த்தால் செய்கிறோம் எனவாகிறது; கிறாள் என்பதைச் சேர்த்தால் செய்கிறாள் எனவாகிறது; இது போலவே மற்ற கிறான், கிறாய், கிறீர் முதலியவைகளை சேர்த்தால் அவைகளுக்குரியவாறு மாறிவிடும். மேற்கூறிய விதிகளுக்கு சரியான விதிகள் ஹிந்தியில் மிகவும் சுருக்க

மாக அமைந்திருக்கின்றன. அவைகளை நன்ருய் ஞாபகம்செய்து அந்தந்த இடத்திற்குரியதை அமைத்துப் பேசவேண்டும்.

2 ஹிந்தியில், கிறேன் என்பதற்கு தாஹூங் எனவும், கிருன் கிருய் என்பவைகளுக்கு தாஹை எனவும், கிறீர் என்பதற்கு தேஹோ எனவும், கிறீர்கள், கிருர்கள், கிரும்என்பவைகளுக்கு தேஹைங் எனவும், கிருள் என்பதற்கு தீஹை எனவும் வரும் இதை மை என்பதற்கு மட்டும் தாஹூங் எனவும் மற்றெல்லா ஆண்பால் ஒருமைக்கும் தாஹை எனவும், பன்மையில் தும் என்பதற்குமாத்திரம் தேஹோ எனவும், மற்றெல்லா ஆண்பால் பன்மைக்கும் தேஹைங் எனவும், பெண்பாலுக்கு தீஹை எனவும் வருமென்று வைத்துக்கொண்டால் மிகவும் நல்லது.

## சில மாதிரி வாக்கியங்கள்

| | |
|---|---|
| மை ஜாதா ஹூங்-நான் போகிறேன்<br>மை 3போல்தாஹூங்-நான்பேசுகிறேன் | மை-என்பதற்கு தாஹூங் மட்டும் வருவதைக் கவனிக்கவும் |
| தூ 3தேக்தாஹை-நீ பார்க்கிருய்<br>வஹ் 3பைட்தாஹை-அவன் உட்காருகிருன்<br>ராம் 3புலாதாஹை-இராமன் கூப்பிடுகிருன் | தூ, வஹ், ராம்முதலிய எல்லா ஆண்பால் ஒருமைக்கும் |

வினைச் சொற்களோடு தாஹைஒன்றுபோல் வருவதைக் கவனிக்கவும்.

| | |
|---|---|
| தும் லாதேஹோ--நீர் கொண்டு வருகிறீர்<br>தும் 2காதேஹோ --நீர் சாப்பிடுகிறீர் | பன்மையில் தும் என்பதற்கு மாத்திரம் |

தேஹோ வருவதைக் கவனிக்கவும்.

| | |
|---|---|
| ஹம் ஆதேஹைங்--நாங்கள் வருகிறோம்<br>ஆப் மார் தேஹைங்--தாங்கள் அடிக்கிறீர்கள்<br>வே லிக் தேஹைங்- அவர்கள் எழுதுகிருர்கள் | ஹம், ஆப், வே, இந்த 3-க்கும் ஒரே மாதிரியாய் |

தேஹைங் வருவதைக் கவனிக்கவும்.

முன் கூறியவைகளை பெண்பாலாக்கவேண்டுமானல் தாஹை தேஹை என்னும் விதிகளைத் தீஹை என மாற்றிக்கொள்ளவேண்டும். உதாரணம்:- கர்தாஹை—செய்கிறான், இதைச் செய்கிறாள் எனச் சொல்லவேண்டுமானல் தாஹை யை எடுத்துவிட்டு கர் என்னும் வினைச்சொல்லோடு தீஹை யென்பதைச் சேர்க்கவேண்டும்—கர்தீஹை. செய்கிறாள். கமலா கௌ்லாதீஹை கமலம்—கூப்பிடுகிறாள். இம்மாதிரியே மற்ற வினைச்சொற்களையும் மாற்றவேண்டும்.

2 எதிர்காலம் மை என்பதற்கு ஒவ்வொரு வினைச் சொற்களோடும் எதிர்காலத்தில் ஊங்கா சேர்க்கவேண்டும். மற்றது வஹ், ராம் முதலிய ஆண்பால் ஒருமைகளுக்கு யேகா சேர்க்கவேண்டும். பன்மையில் தும் என்பதற்கு மட்டும் ஓகே ஒவ்வொரு வினைச்சொற்களோடும் சேர்க்க வேண்டும். மற்ற ஹம், ஆப், வே முதலியவைகளுக்கு ஒவ்வொரு வினையோடும் யேங்கே என்பதைச் சேர்க்கவேண்டும்.

மாதிரி

| | | |
|---|---|---|
| போல்-பேசு<br>ஜா—போ | மை போலூங்கா-நான் பேசுவேன்<br>மை ஜாஊங்கா-நான் போவேன் | ஊங்கா |
| ஆ-வா<br>லிக்-எழுது<br>தௌட்-ஓடு | தூ ஆயேகா-நீ வருவாய்<br>வஹ் லிக்கேகா-அவன் எழுதுவான்<br>ராம் தௌட்டேகா-இராமன் ஓடுவான் | யேகா |

மேலேயுள்ள வாக்கியத்தில் மைக்கு மட்டும் ஒவ்வொரு வினையோடும் ஊங்காவும் மற்றவை மூன்றுக்கும் யேகா வும் வருவதைக் கவனிக்கவும்.

| | | |
|---|---|---|
| புலா-கூப்பிடு<br>மார்-அடி | தும் புலாவோகே-நீர் கூப்பிடுவீர்.<br>தும் மாரோகே-நீர் அடிப்பீர் | ஓகே |
| கா-சாப்பிடு<br>கர்-செய்<br>பைட்-உட்காரு | ஹம் காயேங்கே-நாம் சாப்பிடுவோம்<br>ஆப் கரேங்கே-தாங்கள் செய்வீர்கள்<br>வே பைட்டேங்கே-அவர்கள் உட்காருவார்கள் | யேங்கே |

மேலே யிருக்கும் வாக்கியத்தில் தும் க்கு மட்டும் வோ3கே யும் மற்றெல்லாப் பன்மைக்கும் யேங்கே யும் வருவதைக் கவனிக்கவும். மேற் கூறியவைகளை பெண்பாலாக்க வேண்டுமானல் எதிர்கால விதியின் கடையெழுத்தாகிய 3கா 3கே என்பவைகளை 3கீ யாக மாற்றிக்கொள்ள வேண்டும்.

உதாரணம்:- இராமன் சாப்பிடுவான்-ராம் காயே3கா. சீதை சாப்பிடுவாள்—சீதா 3காயே3கீ. இப்படியே ஒவ்வொன்றையும் மாற்றிக்கொள்ள வேண்டும். எதிர்கால விதியின் முதலெழுத்தாகிய யே என்பதை வே யாகவும் மாற்றிப் பேசலாம்.

உதாரணம்:— ராம் 2காயே3கா-இராமன் சாப்பிடுவான்; இதை ராம் 2காவே3கா எனவும் பேசலாம்.

3தே, லே, என்னும் இரண்டு வினைகள் மட்டும், எதிர்காலத்தில் மை என்பதற்கு 3தே 3தூங்கா எனவும், லே-லூங்கா எனவும் மாறும். 3தூங்3கா-கொடுப்பேன், லூங்3கா-எடுப்பேன் எதிர்கால விதியின் கடையெழுத்தாகிய 3கா, 3கே, கீ என்பவைகளை நீக்கிவிட்டால் சந்தேக எதிர்காலமாகிவிடும். லிக்கேங்-எழுதலாம். ஆயேங்-வரலாம். மற்றவைகளையும் இவ்வாறே சந்தேக எதிர்காலத்தில் பேசலாம்.

3 இறந்தகாலம்:-சாதாரண இறந்தகாலத்தில் மூவிடப் பெயர்களுக்கும் ஒரே விதிதான் அதாவது, வினைச்சொல் க், ங், ச், ட், முதலிய 18மெய்யெழுத்துக்களை கடைசியில் உடையதாயிருந்தால் கா, ஙா, சா, டா முதலிய 18உயிர்மெய் எழுத்துக்களாக அததன் இனத்திற் கேற்றவாறு மாற்றிவிடவேண்டும்.

உதாரணம்:— 3தேக்-பார், 3தேக்கா—பார்த்தான், 3பைட்-உட்காரு, 3பைட்டா-உட்கார்ந்தான், சல்-நட, சலா-நடந்தான் இப்படியே மற்ற மெய்யெழுத்தில் முடிந்திருக்கிற வினைகளையும் மாற்றிக்கொள்க.

2 வினைச்சொற்கள் ஆ,ஓ வில் முடிந்திருந்தால் அவைகளோடு யா சேர்த்துப்பேசவேண்டும்.

உதாரணம்:— ஆ-வா ஆயா-வந்தான், கிலா-கூப்பிடு, கிலாயா-கூப்பிட்டான். மற்றவைகளும் இப்படியே.

3 வினைச் சொல்லின் கடைசியில் ஈ,எ, இருந்தால் அவைகளை இ யாக மாற்றி அதாவது, நெட்டெழுத்தை இயின் குறிலெழுத்தாக்கி அதனுடன் யா சேர்க்கவேண்டும்.

உதாரணம்:— பீ-குடி, பியா குடித்தான், தே-கொடு, தியா-கொடுத்தான். இதைப்போன்றுள்ள மற்றவைகளும் இப்படியே வரும்.

## இறந்தகாலத்தின் குறிப்பும் நே விதியும்.

வினைச் சொற்களில் குன்றியவினை குன்றாவினை என இருவிதம் உண்டு. இதைச் செயப்படுபொருள் கொள்ளும்வினை செயப்படுபொருள் கொள்ளாவினை எனவும் சொல்லலாம். குன்றாவினையில் எதை என்னும் கேள்வி பிறக்கும். எப்படியெனில்? எழுதினான், எதை எழுதினான். சாப்பிட்டான், எதைச் சாப்பிட்டான். இவைகள் குன்றாவினை. குன்றாவினை எதாவது ஒரு பொருளை உடையதாயிருக்கும்.

வந்தான், போனேன் இவைகள் குன்றிய வினை. வா-போ, தூங்கு—அழு இவையெல்லாம் குன்றிய வினையாகும். எப்படியாவது இவைகளின் வித்தியாசங்களை கொஞ்சம் தெரிந்து கொள்ளப் பிரயாசப்படவேண்டும். சரியாய் தெரிந்து கொள்ளாவிடின் பேசுகிற பாஷை கொஞ்சம் கொச்சையா யிருக்கும்.

---

இங்கு கொஞ்சம் இலக்கணப் பெயர்களை உபயோகித்திருப்பதற்காக திகைக்காதீர்கள்.

இறந்த காலத்தில் குன்றுவினை மூவிடப் பெயர்களுக்கும் ஒரேமாதிரிதான் வரும். ஆனால், எழுவாயோடு கட்டாயம் நே சேர்க்க வேண்டும் மை லிக்கா-நான் எழுதினேன். இது தப்பு. மைநே லிக்கா நான் எழுதினேன். இதுதான் சரி. இப்படியே மற்றவைகளோடும் நே சேர்க்கவேண்டும்.

மாதிரி:- நாங்கள் சாப்பிட்டோம்—ஹம் நே 2காயா. இராமன் எழுதினான்-ராம் நே லிக்கா. நீ பார்த்தாய்-தூநே 3தேக்கா. மற்றவைகளும் இப்படியே.

குன்றிய வினை ஆண்பால், பெண்பால், ஒருமை, பன்மைக் குரிய ஆ, ஏ, ஈ, விதிப்படிக்கு மாறும் எழுவாயோடு நே சேராது.
மாதிரி:— நான் வந்தேன்-மை ஆ யா. அவர்கள் தூங்கினார்கள்—வே ஸோ யே. இராமன் உட்கார்ந்தான்-ராம் 3பைட் டா. இம் மாதிரியே எல்லாக் குன்றிய வினைகளும் வரும்.

ஹோ-ஆகு, கர்-செய், ஜா-போ இம் மூன்றும் மேல் கூறிய விதிப்படிக்கு மாறாது. இறந்த காலத்தில் இவைகளின் ரூபம் ஹோ ஹு-வா எனவும், கர் கியா எனவும், ஜா 3கயா எனவும் அமைந்திருக்கும்.

உதாரணம்:— நான் இப்படி ஆனேன்——மை ஐஸா ஹுவா. கோபால் செய்தான்-கோபால் கியா. இராமன் அங்கே போனான்-ராம் வஹாங் 3கயா இப்படியே வரும்.

மேற்கூறிய 3காலங்களையும் மறுக்க வேண்டுமானால் வினைகளுக்கு முன்னால் †நஹீங் அல்லது ந சேர்க்கவேண்டும்.
உதாரணம்:— ராமன் எழுதுகிறான்-ராம் லிக்தா ஹை இராமன் எழுதுகிறதில்லை-ராம் நஹீங் லிக்தாஹை. இராமன் எழுதுவான்-ராம் லிக்கே3கா. இராமன் எழுதமாட்டான்—ராம் ந லிக்கே3கா. இராமன் எழுதினான்—ராம் நே லிக்கா. ராம்எழுதவில்லை-ராம் நஹீங் லிக்கா.

---

†இல்லை யென்பது இதன் தனி அருத்தம். இதை நை என்றே பேசுவார்கள். நிகழ்காலத்தை மறுக்கும்போது வினைகளுக்கு முன் நஹீங் சேர்ப்பதோடு கடைசியில் வரக்கூடிய ஹை, ஹோ, ஹு-ங் என்பவைகளையும் எடுத்துவிடலாம்.

| | நிகழ் காலம் | எதிர் காலம் | இறந்த காலம் |
|---|---|---|---|
| மை | விக்தாஹ-ங் | விக் கூங்3கா | விக்கா |
| நான் | எழுதுகிறேன் | எழுதுவேன் | எழுதினேன் |
| தூ | 3தேக் தாஹை | 3தேக் கே3கா | 3தேக்கா |
| நீ | பார்க்கிறுய் | பார்ப்பாய் | பார்த்தாய் |
| வஹ் | சல் தாஹை | சலே3கா | சலா |
| அவன் | நடக்கிறுன் | நடப்பான் | நடந்தான் |
| தும் | 3பைட் தேஹோ | 3பைட் டோ3கே | 3பைட்டே |
| நீர் | உட்காருகிறீர் | உட்காருவீர் | உட்கார்ந்தீர் |
| வே | 2கா தேஹைங் | 2கா யே3ங்கே | 2காயா |
| அவர்கள் | சாப்பிடுகிறுர்கள் | சாப்பிடுவார்கள் | சாப்பிட்டார்கள் |
| ஆப் | ஆ தேஹைங் | ஆயேங்3கே | ஆயே |
| தாங்கள் | வருகிறீர்கள் | வருவீர்கள் | வந்தீர்கள் |
| ஹம் | 3புலா தேஹைங் | 3புலா வேங்கே | 3புலாயே |
| நாங்கள் | கூப்பிடுகிறோம் | கூப்பிடுவோம் | கூப்பிட்டோம் |

குறிப்பு:— மேலே எழுதியிருக்கிற மூன்று காலங்களிலும் ஒருமையில், நான் என்பதைத் தவிர மற்றெல்லா ஆண்பால் ஒருமைக்கும் ஒரே விதியும், பன்மையில் நீர் என்பதைத் தவிர மற்றெல்லாப் பன்மைகளுக்கும் ஒரே விதியுமாக வினைச் சொற்களோடு சேர்க்கப் பட்டிருப்பதைக் கவனித்துக் கொள்ளவும். எல்லா வினைச் சொற்களோடும் மேற்கூறிய பிரகாரமே மூன்று காலங்களிலும் அவையவைகளுக்குரிய விதிகளைச் சேர்த்துப் பேசவேண்டும். அவ்வாக்கியங்களை எதிர்மறை ஆக்க வேண்டுமாயின் முந்திய பாடங்களில் கூறியபடி வினைச்சொற்களுக்கு முன்பு நஹீங் என்பதைச் சேர்த்து விடவேண்டும்.

## மாதிரி வாக்கியங்கள்

சீதா க்யா கர்திஹை—சீதை என்ன செய்கிறாள்
வஹ் தமில் நஹீங் 3போல்தா—அவன் தமிழ் பேசுகிறதில்லை
மை வஹாங் ஜாஊங்3கா—நான் அங்கே போவேன்
நாராயண் யஹாங் ஆயே3கா—நாராயணன் இங்கே வருவான்
ராம் இ4தர் நஹீங் ஆயே3கா—இராமன் இங்கே வரமாட்டான்.

---

## 4-வது பாடம்

### 1-தனி நிகழ்காலம்

ஹூங்—இருக்கிறேன்
ஹை—இருக்கிறாய், இருக்கிறான், இருக்கிறாள் இருக்கிறது.
ஹோ—இருக்கிறீர்
ஹைங்-இருக்கிறீர்கள்,இருக்கிறார்கள்,இருக்கிறோம்,இருக்கின்றன

### 2-தனி எதிர்காலம்

ஹூங்3கா—இருப்பேன்
ஹோ3கா—இருப்பாய், இருப்பான், இருக்கும்.
ஹோ3கே—இருப்பீர், இருப்பீர்கள், இருப்பார்கள்,இருப்போம்.
ஹோ3கீ—இருப்பாள்

### 3-தனி இறந்தகாலம்

2தா—இருந்தேன், இருந்தாய், இருந்தான், இருந்தது.
2தே—இருந்தீர், இருந்தீர்கள், இருந்தார்கள், இருந்தோம்,
2தீ—இருந்தாள்.

மேலே கூறிய விதிகள் எழுவாயோடு அவ்வக்காலங்களில் தனித்துக்கூறப்படும்.

மாதிரி

மை ஹூங்—நான் இருக்கிறேன்.
ஆப் ஹைங்—தாங்கள் இருக்கிறீர்கள்.
மை ஹூங்கா—நான் இருப்பேன்
கமலா ஹோகி—கமலம் இருப்பாள்
ஹம் தே—நாங்கள் இருந்தோம்
சீதா தீ—சீதை இருந்தாள்
சீதா ஹை—சீதை இருக்கிறாள்.
வஹ் ஹை—அது இருக்கிறது.

இம்மாதிரியே மற்றவைகளையும் காலங்களுக்கேற்ப அந்தந்த எழுவாயிற்குரியவைகளைச் சேர்த்துப் பேசவேண்டும். இந்த மூன்று காலத் தனி விதிகளையும் இறந்த காலத்துடன் சேர்த்தால் ஷடி காலத்தை சேர்ந்த மூன்று காலமாகிவிடும்.

மாதிரி:—

ராம் ஆயா—இராமன் வந்தான்
ராம் ஆயா ஹை—இராமன் வந்திருக்கிறான்
ராம் ஆயா ஹோகா—இராமன் வந்திருப்பான்
ராம் ஆயா தா—இராமன் வந்திருந்தான்

இம்மாதிரியே எல்லா வினைச்சொற்களையும் இறந்தகாலமாக்கி அந்தந்த எழுவாயிற்குரிய மூன்று காலத் தனி விதிகளையும் சேர்த்துக்கொள்ளவேண்டும்.

தமிழில் கொண்டு என்னும் சொல் ஒவ்வொரு வினைச்சொற்களோடும் சேர்ந்து, இடகாலபேதங்களுக்கேற்ப பேசிக்கொண்டிருக்கிறான், படித்துக்கொண்டிருந்தாள், வந்துகொண்டிருப்பார் என எவ்வாறு பேசப்படுகிறதோ அதற்கு ஹிந்தியில் எழுவாய்

ஆண்பால் ஒருமையாகவிருந்தால் வினைச்சொற்களுடன் ரஹா எனவும், பன்மையாகவிருந்தால் ரஹே எனவும், பெண்பாலாயிருந்தால் ரஹி எனவும் சேர்த்து அந்தந்த எழுவாயிற்குரிய மூன்றுகாலத் தனி விதிகளையும் சேர்த்துப் பேசப்படுகிறது.

## மாதிரி நிகழ்காலம்

மை லிக் ரஹா ஹூங்—நான் எழுதிக்கொண்டிருக்கிறேன்
வஹ் 3தேக் ரஹா ஹை—அவன் பார்த்துக்கொண்டிருக்கிறான்
சீதா ப4ட் ரஹி ஹை—சீதை படித்துக்கொண்டிருக்கிறாள்
வே ஆ ரஹே ஹைங்—அவர்கள் வந்துகொண்டிருக்கிறார்கள்

## எதிர்காலம்

மை 2கா ரஹா ஹூங்3கா—நான் சாப்பிட்டுக்கொண்டிருப்பேன்
ராம் 3பைட் ரஹா ஹோ3கா—இராமன் உட்கார்ந்துகொண்டிருப்பான்
வஹ் 3போல் ரஹி ஹோ3கி—அவள் பேசிக்கொண்டிருப்பாள்
ஆப் ஜா ரஹே ஹோ3கே—தாங்கள் போய்க்கொண்டிருப்பீர்கள்

## இறந்தகாலம்

மை நிகல் ரஹா 2தா—நான் புறப்பட்டுக் கொண்டிருந்தேன்
வஹ் ஸோ ரஹி 2தீ—அவள் தூங்கிக் கொண்டிருந்தாள்
ஹம் மார் ரஹே 2தே—நாங்கள் அடித்துக்கொண்டிருந்தோம்
ஆப் 3தோல் ரஹே 2தே—நீங்கள் நிறுத்துக்கொண்டிருந்தீர்கள்

மற்ற வினைச்சொற்களோடும் இவ்வாறே மேற்கூறிய விதிகளைச் சேர்த்துப் பேசவேண்டும்.

---

ங் இந்த எழுத்து வருகிற இடங்களெல்லாம் அதை அழுத்தி உச்சரிக்காமல் பாதியளவாய்த் தோன்றியும் தோன்றாமலும் உச்சரிக்க வேண்டும்.

## வினைச்சொற்கள்

3பனு—ஆக்கு
லௌட்—திரும்பு
ஹட்—விலகு
பக3ட்—பிடி
டஹல்—உலாவு
ரோக்—தடு
ஸாஹ—விரும்பு
3பேச்—வில்
3கிர்—விழு
3டர்—பயப்படு
லேட்—படு
2கேல்—விளையாடு
3டூ3ப்—மூழ்கு
ஜா3க்—விழி
ஜீ—பிழைத்துக்கொள்
4தோ—கழுவு
ஸமஜ்—அறி
கமா—சம்பாதி
பூச்—கேள்
டஹர்—தங்கு
சூம்—முத்தமிடு
ஸதா—வருத்து
ஜான்—தெரிந்துகொள்
3கா—பாடு
தைர்—நீந்து
2கோல்—திற

## பெயர்ச்சொற்கள்

பதா—விலாசம்
2குஸ்3பு—வாசனை
3ப3த்3பு—நாற்றம்
ஸாரா3ப்—சாராயம்
ஸா3புன்—சோப்பு
ஆட்டா—மாவு
ஸா3தி—கல்யாணம்
தக்லீவ்—கஷ்டம்
நுக்ஸான்—நஷ்டம்
வ்பாய்3தா—லாபம்
ஸ3பேரா—அதிகாலை
இஜ்ஜத்—மரியாதை
லடாயி—சண்டை
ஸாரா—முழுவதும்
நௌகர்—வேலைக்காரன்
முஸாபிர்—பிரயாணி
இஸ்தேமால்—உபயோகம்
மால்—சாமான்
3பால்—உரோமம்
3பாத்—வார்த்தை
ஸ3பக்—பாடம்
உமர்—வயது
லக்3டி—விறகு
தஸ்வீர்—படம்
ஏகாயேக்—திடீரென்று
உ3தார்—கடன்

| | |
|---|---|
| 4குஸ்—நுழை | ஜூட்மூட்—பொய் புரட்டு |
| பத்லா—காட்டு | தோ3டா—கொஞ்சம் |
| மான்—மதி | 3பில்குல்—முற்றிலும் |
| சிப்—மறை, ஒழிந்துகொள் | 2கூ3ப்—நன்ருக |
| ஸஸ்தா—மலிவான | ஸச்சா—மெய்யான |

## 5-வது பாடம்

### வேற்றுமை

தமிழைப் போன்று ஹிந்தியிலும் 8வேற்றுமைகள் இருக்கின்றன நாம் தெரிந்துகொள்ளவேண்டியது 6வேற்றுமைகள்தான். அவைகளை ஒவ்வொரு பெயர்ச்சொற்களோடும் சேர்த்துக்கொள்ளவேண்டும். கீழே ராம் என்னும் பெயர்ச் சொல்லோடு 6வேற்றுமை உருபுகளையும் சேர்த்துக்காட்டுகிறோம். அதைக் கவனித்து மற்ற பெயர்ச்சொற்களோடும் சேர்த்துப் பேசுங்கள்.

| தமிழ் | ஹிந்தி | தமிழ் | ஹிந்தி |
|---|---|---|---|
| 2 ஐ | கோ | இராமனை—ராம் கோ | |
| 3 ஆல், உடன், ஒடு—ஸே | | இராமனால்—ராம் ஸே | |
| 4 கு, ஆக—கோ, கேலியே | | இராமனுக்காக—ராம் கேலியே | |
| 5 இருந்து, காட்டிலும்—ஸே | | இராமனைக்காட்டிலும்—ராம் ஸே | |
| 6 உடைய—*கா, கே, கி | | இராமனுடைய—ராம் கா | |
| 7 இல், இடம்—மேங், பர் | | இராமனில்—ராம் மேங் | |

சில வேற்றுமைகளுக்கு இரண்டு மூன்று உருபுகள் இருப்பினும் அவைகளில் ஒன்றைத்தான் மேலே இராமன் என்னும் பெயர்ச் சொல்லோடு சேர்த்துக் காட்டியிருக்கின்றன. மற்ற உருபுகளையும் அது போல் சேர்த்துக்கொள்ளலாம்.

---

*இது பெண்பாலில் கீ யாகவும், வாக்கியத்தில் வருகிற செயப்படு பொருளோடு வேறு வேற்றுமைகள் சேர்ந்திருந்தால் கே யாகவும்மாறும்

## வேற்றுமை சேர்ந்த மாதிரி வாக்கியங்கள்

இராமனை இங்கே கூப்பிடும்—ராம் கோ யஹாங் 3புலாவோ

சாரதா நாராயணனோடுபேசுகிறாள்-சார்தா நாராயண் ஸே 3போல்
[தி ஹை

நான் திருடனுடன்பேசுகிறதில்லை-மை சோர்ஸே நஹீங்போல்தா

வீட்டிற்காக தண்ணீர் எடுக்கிறார்கள்-4கர் கேலியே பானி லேதே
[ஹைங்

குதிரை வீட்டிலிருந்து வருகிறது--4கோடா 4கர் ஸே ஆதா ஹை

அரண்மனையை விட வீடு சிறியது-மஹல் ஸே 4கர் சோட்டா ஹை

இது ராமனுடைய தோட்டம்-யஹ் ராம் கா 3பாக் ஹை

காட்டில் மிருகங்கள் வசிக்கின்றன--ஜங்கல் மே ஜான்வர் ரஹ்தே
[ஹைங்

இம்மாதிரியே நீங்கள் படித்திருக்கிற ஹிந்தி சொற்களினால் வார்த்தைகளை அமைத்துப்பேசுங்கள்.

பெயர்ச் சொற்களை பன்மையாக்குவதற்கு ஒவ்வொரு பெயர்ச் சொற்களோடும் தமிழில் கள் எனுஞ்சொல் சேர்க்கப்படுவது போல் ஹிந்தியில் பெயர்ச் சொற்களோடு ஓங் எனுஞ் சொல் சேர்க்கப்படுகிறது.

உதாரணம்:— 4கர்-வீடு, 4கரோங்-வீடுகள் இப்படியே மற்றவைகளையும் பன்மையாக்கி மேற்கூறிய வேற்றுமை உருபுகளைச் சேர்க்க வேண்டும். 4கர்கோ-வீட்டிற்கு, 4கரோங்கோ-வீடுகளுக்கு, மற்றவைகளும் இப்படியே.

## வேற்றுமைகளை வினைச்சொற்களோடு சேர்க்கும் விதம்

பெயர்ச் சொற்களில் வேற்றுமை உருபுகள் சேருவதுபோல் வினைச் சொற்களிலும் சேரும். வினைச்சொற்களில் ஷெ உருபு சேர்ப்பதற்குமுன் நே என்னும் எழுத்தைச் சேர்த்துக்கொள்ளவேண்டும்.

உதாரணம்:—

| | |
|---|---|
| பேசு—3போல் | பேசுவதற்கு—3போல்னேகோ |
| போ—ஜா | போவதினால்—ஜானேஸே |
| செய்—கர் | செய்வதற்கு—கர்னேகேலியே |
| சாப்பிடு—2கா | சாப்பிடவேண்டிய—2கானேகா |

மேற்கூறிய பிரகாரம் எல்லா வினைப்பகுதிகளுடனும் வேற்றுமைகளைச் சேர்த்துப் பேசிப்பழக வேண்டும்.

தன்மை, முன்னிலை படர்க்கை ஆகிய மூவிடப் பெயர்களும் வேற்றுமை சேருங்கால் கீழ்க்கண்டவாறு மாறுதல் அடைகின்றன.

### தன்மை

| | |
|---|---|
| 2 என்னை—முஜே, முஜ்கோ. | எங்களை—ஹமேங், ஹம் கோ |
| 3 என்னால்,என்னுடன்—முஜ்ஸே | எங்களால்—ஹம் ஸே |
| 4 எனக்காக—மேரேலியே | எங்களுக்காக—ஹமா ரேலியே |
| 5 என்னிடத்திலிருந்து-முஜ்ஸே | எங்களிடமிருந்து—ஹம் ஸே |
| 6 என்னுடைய—மோரா, மேரே, மேரி. | எங்களுடைய—ஹமாரா, ஹமாரே, ஹமாரி. |
| 7 என்னிடம்—முஜ்மேங்,முஜ்பர் | எங்களிடம்-ஹம்மேங், ஹம்பர். |

### முன்னிலை

| | |
|---|---|
| 2 உன்னை—துஜே, துஜ்கோ | உம்மை—தும்ஹேங், தும்கோ |
| 3 உன்னால், உன்னோடு-துஜ்ஸே | உம்மால், உம்மோடு-தும்ஸே |
| 4 உனக்காக—தேரேலியே | உமக்காக--தும்ஹாரேலியே |
| 5 உன்னிடமிருந்து—துஜ்ஸே | உம்மிடமிருந்து—தும் ஸே |
| 6 உன்னுடைய—தேரா, தேரே, தேரி | உம்முடைய—தும்ஹாரா, தும்ஹாரே, தும்ஹாரி. |
| 7 உன்னிடத்தில்—துஜ்மேங், துஜ்பர் | உர்மிடம்—தும் மேங், துப்பர் |

## படர்க்கை

வேற்றுமை சேருங்கால் வஹ், உஸ் எனவும், வே, உன் எனவும் மாறுகிறது.

| | |
|---|---|
| 2 அவனை—உஸே, உஸ்கோ | அவர்களை—உன்ஹேங், உன்கோ |
| 3 அவனால், அவனோடு—உஸ்ஸே | அவர்களோடு—உன்ஸே |
| 4 அவனுக்காக—உஸ்கேலியே | அவர்களுக்காக—உன்கேலியே |
| 5 அவனிடமிருந்து-உஸ்ஸே | அவரிடமிருந்து—உன்ஸே |
| 6 அவனுடைய—உஸ்கா, உஸ்கே, உஸ்கி | அவர்களுடைய—உன்கா, உன்கே, உன்கி |
| 7 அவனிடம்-உஸ்மேங், உஸ்பர் | அவர்களிடம்-உன்மேங் உன்பர் |

இஸ்—இவன், இது. இன்—இவர்கள், இவைகள். கிஸ்—எவன், எது. கின்—எவர்கள், எவைகள், இவைகளோடும் வேற்றுமை உருபுகளைச் சேர்த்துக்கொள்ளவேண்டும்.

| | |
|---|---|
| கூ3ப்ஸூரத்---அழகான | 3பாஸி—பழைய |
| 3ப3த்ஸூரத்---அழகில்லாத | அகேலா—தனியாக |
| முஷ்கில்---கஷ்டமான | 3பாத்சீத்—சம்பாஷணை |
| ஸஹல், ஆஸான்-சுலோபமான | ஹர்—ஒவ்வொரு |
| யா, வா—அல்லது | 3தூஸ்ரா—அடுத்த |
| பர், பரந்து, லேகின்—ஆனால் | மௌகா—தருணம் |
| க்யோங்கி---ஏனென்றால் | ஜவா3ப்—பதில் |
| ஸ்லியே, ஸ்வாஸ்தே-ஆகையால் | யா3த்—நினைவு |
| தோ4பி—ஆனபோதிலும் | 3குஸ்ஸா—கோபம் |
| ஸிவாய---தவிர | 2க 3பர்—சாமாச்சாரம் |
| கி---என்று | ஸஜா—தண்டனை |
| பல்கி---அன்றியும் | 4பர்ஸக்—கூடியவரை |

P152-51

## இடைச் சொற்கள்.

ஊபர்—மேலே
நீச்சே—கீழே
3பாஹர்—வெளியே
4பீதர்—உள்ளே
பாஸ்—கிட்ட
நஜ்3தீக்—அருகில்
3பா3த்—பிறகு
பஹலே—முதலில்
ஸாம்னே—எதிரில்
அந்தர்—உள்ளே
ஆ3கே—முன்னால்
பீச்சே—பின்னால்
ஸாத்—கூட
3பீச்—நடுவில்

மேலேயிருக்கும் இடைச் சொற்கள் வாக்கியத்தில் வரும்பொழுது அவைகளுக்கு முன்னால் கே சேர்க்கவேண்டும். உதாரணம்:—ராம்கே ஆ3கே—இராமனுக்கு முன்னால். 4கர்கே அந்தர்—வீட்டினுள்ளே கோபால்கே பாஸ்—கோபாலன் கிட்ட. உஸ்கே3பாத்—அதற்குப் பிறகு முதலியன. இப்படியே ஒவ்வொன்றிற்கும் முன்னால் கே சேர்த்து வாக்கியத்தில் உபயோகிக்க வேண்டும்.

கீழே காட்டியிருக்கும் இடைச் சொற்களின் முன்னால் கீ சேர்க்க வேண்டும்.

தரவ்ப்—பக்கமாக
தரஹ்—மாதிரி
3பாபத்—விஷயமாக
ஜ3கஹ்—பதிலாக

### மாதிரி

வஹ் மேரே 3கர்கீ தரவ்ப் ஜாதிஹை—அவன் என்னுடைய வீட்டின் பக்கமாகப் போகிறான்.
ராம்கீ தரஹ் லச்மண் 3போல்தாஹை—இராமனைப்போல் இலக்ஷ்மணன் பேசுகிறான்.
சாரதா கீபா3பத் மை யஹாங் ஆயா—சாரதா விஷயமாக நான் இங்கு வந்தேன்.

மஹ்ங்கா—கிராக்கியான
ஸாவ்—சுத்தமான
பௌரன், துரந்த—உடனே
ஜ்யோங்—எப்படி
பினா—இல்லாமல்
நஹீந் தோ—இல்லாவிட்டால்
பீ—கூட
கேவல், ஹீ—மாத்திரம்
ஜூட்டா—பொய்யான
தாஜா—புதிய
அசானக்—அகஸ்துமாற்றாய்
த்யோங்—அப்படி
தாம்—விலை
தில்—மனது
ஹால்—நிலைமை
ஆஸா—நம்பிக்கை

## 6-வது பாடம்.

இங்கு சில வினைச் சொற்களோடு சில விதிகளைச் சேர்த்துக் காட்டியிருக்கிறோம். அதன்பிரகாரம் எல்லா வினைச் சொற்களோடும் சேர்த்துப் பேசவேண்டும்.

1. பார், கொடு, போ, இவைகளைபார்த்து, கொடுத்து, போய் அல்லது, பார்த்துவிட்டு, கொடுத்துவிட்டு, போய்விட்டு என எப்படித் தமிழில் பேசப்படுகிறதோ அதற்கு ஹிந்தியில் ஒவ்வொரு வினைச் சொற்களோடும் கர், சேர்த்துப் பேசப்படுகிறது.

### மாதிரி

| | |
|---|---|
| நான் மதுரைக்குப் போய்விட்டு வருகிறேன். | மை மதுரா மே ஜாகர் ஆத்தா ஹூங். |
| அவன் எப்பொழுதும் இராமனை பார்த்து பேசுகிறான். | வஹ் ஹமேஸா ராம்கோ தேக்கர் போல்தாஹை. |

இம்மாதிரியே மற்ற வினைச்சொற்களோடும் கர் சேர்த்துப் பேசவேண்டும்.

2. வினைச்சொற்களோடு னா சேர்த்தால் எதிர்கால வினையெச்சமாகவும், தொழிற் பெயராகவும் மாறும். தேக்னா—பார்க்க, பார்ப்பது தேனா—கொடுக்க, கொடுப்பது.

## மாதிரி

| | |
|---|---|
| நான் தங்களைப் பார்ப்பது நல்லதல்ல. | மை ஆப்கோ தேக்ஞ அச்சா நஹீங் ஹை |
| நாராயணன் யாரைப் பார்க்கப் போகிறான். | நாராயண் கிஸ்கோ தேக்ஞ ஜாத்தா ஹை |

இவைபோன்றே எல்லா வினைச் சொற்களோடும் ஞ சேர்த்துப் பேசவேண்டும்.

3. ஜ3ப்—எப்பொழுது த3ப்—அப்பொழுது இவைகளை வார்த்தையில் உபயோகிக்கும் விதம்.

| | |
|---|---|
| சீதை அங்கே வந்தபோது தங்களைப் பார்த்திருக்கிறாள். | ஜ3ப் சீதா வஹாங் ஆயி த3ப் ஆப்கோ தேக்கி ஹை. |
| அவன் வரும்பொழுது நானும் வருகிறேன். | ஜ3ப் வஹ் ஆத்தாஹை த3ப் மை 4பி ஆதா ஹூங். |

4. 3பிஞ—இல்லாமல். இதை வினைச்சொற்களோடு சேர்க்கும்போது வினைச்சொற்களை இறந்தகாலத்திய பன்மையாக்கி அவைகளுக்கு முன்னாவது பின்னாவது சேர்க்க வேண்டும். 2காயே 3பிஞ, அல்லது 3பிஞ 2காயே—சாப்பிடாமல். 3தேக்கே3பிஞ—பார்க்காமல். 3கயே 3பிஞ—போகாமல் இப்படியே எல்லா வினைச்சொற்களோடும் 3பிஞ என்பதைச் சேர்க்கவேண்டும்.

## மாதிரி

| | |
|---|---|
| நான் தங்களைக் கூப்பிடாமல் அங்கே போகமாட்டேன். | மை ஆப்கோ 3புலாயே 3பிஞ வஹாங் நஹீங் ஜாஊங்3கா |
| சீதை சாப்பிடாமல் வந்திருக்கிறாள். | சீதா 2காயே 3பிஞ ஆயி ஹை. |

5. தோ, இது வாக்கியத்திற்கு மத்தியில் வந்து நிபந்தனையைக் காட்டும்.

மாதிரி

| | |
|---|---|
| தாங்கள் வந்திருந்தால் நான் போயிருப்பேன். | ஆப் ஆதே தோ மை ஜாத்தா. |
| சீதை கூப்பிட்டிருந்தால் நான் அங்கே சாப்பிட்டிருபேன். | சீதா 3புலாதி தோ மை வஹாங் 2காத்தா. |

6. ஹுவா, இது பன்மையில் ஹுயே எனவும், பெண்பாலில் ஹுயி எனவும், மாறும். இதைக் கீழே காட்டியபடி எல்லா வினைச் சொற்களிலும் அமைத்துப் பேசலாம்.

மாதிரி

| | |
|---|---|
| அவன் உட்கார்ந்து கொண்டு பேசுகிறான். | வஹ் 3பைட்தா ஹுவா 3போல்தாஹை. |
| அவர்கள் பார்த்துக்கொண்டு வருகிறார்கள். | வே 3தேக்தேஹுயே ஆதே ஹைங். |
| சீதை அழுதுகொண்டு சாப்பிடுகிறாள். | சீதா ரோதி ஹுயி 2காதி ஹை. |

7. கி-என்று, இது வாக்கியங்களுக்கு மத்தியில் அமைந்துவரும்.

மாதிரி

| | |
|---|---|
| நீங்கள் என்னிடம் ரூபாய் கொடுங்கள் என்று நான் நினைக்கிறேன். | மை ஸோச்தாஹூங் கி ஆப் மேரேபாஸ் ருப்யா 2கரீததேங்கே. |
| நாங்கள் கான்பூருக்கு போக வேண்டுமென்று விரும்புகிறோம் | ஹம் சாஹ்தே ஹைங் கி கான் பூர் மே ஜானா ஹை. |

8. ஔர்-உம், மேலும். இது பெயர்ச் சொற்களை ஒன்றோடொன்று சேர்க்கவும், வேறொன்றைச் சுட்டிக்காட்டவும் வாக்கியங்களில் வருகிறது.

### மாதிரி

| | |
|---|---|
| இராமனும் இலச்சுமணனும் எங்கேயிருந்து வருகிறார்கள் | ராம் ஔர் லச்மண் கஹாங்ஸே ஆத்தே ஹைங். |
| உன்னுடைய கடையைப் பார்ப்பதற்காக இன்னும் ஒரு மனிதன் வந்திருக்கிறான். | துமாரே 3துக்கான்கோ 3தேக்னேகே வாஸ்தே ஔர் எக் ஆச்மி ஆயா ஹை. |

9. வாலா இதைப் பெயர்ச் சொற்களோடு சேர்த்தால் அதற்குரியவனைக்கும். உதாரணம்:— 3காடிவாலா—வண்டிக்காரன் 3தூ4த்வாலா—பால்காரன். வினைச் சொற்களோடு சேர்த்தால் அவ்வினையாற்றுபவர்களைக் குறிக்கும். ஆனால், வினைச்சொற்களோடு சேர்க்கும்போது னேவாலா எனச் சேர்க்கவேண்டும். ஜானே வாலா—போகிறவன். லிக்னே வாலா—எழுதுகிறவன். இப்படியே மற்ற எல்லா வினைச் சொற்களோடும் சேர்த்துப் பேசவேண்டும். இதைப் பன்மையில் வாலே எனவும், பெண்பாலில் வாலி எனவும் மாற்றிக்கொள்ளவேண்டும்.

### மாதிரி

| | |
|---|---|
| வெளியே போகிறவன் யார்? | 3பாஹர் ஜானேவாலா கோன் ஹை? |
| அங்கே பேசுகிற ஸ்திரீ எங்களை பார்க்கிறாள். | வஹாங் 3போல் னேவாலி ஔரத் ஹம்கோ 3தேக்தி ஹை |
| அவர்கள் எங்கே யிருந்து வருபவர்களாய் இருக்கிறார்கள். | வே கஹாங்ஸே ஆனேவாலே ஹைங். |

---

தூ-நீ. இது வட இந்தியாவில் மிகவும் இழிவான சொல்லாகக் கருதப்படும். ஆகையினால், குழந்தைகளைத் தவிர மற்றவர்களைத் தும் என்றே பேசவேண்டும்.

ஜஹாஜ்---கப்பல்
நாவ்---தோணி
குர்த்தா---குடித்துணி
ஜூத்தா---மிதியடி
3பாதல்—மேகம்
ஆராம்—சுகம்
எக்தா—ஒற்றுமை
ஹர்யேக்—ஒவ்வொரு
2காஸ்கர்—முக்கியமாக
ஸுபஹ்—காலை
4தோப்ஹர்—நடுப்பகல்
ஸப்தாஹ்—வாரம்

4தோத்தி---வேஷ்டி
ஸாடி---புடவை
ரேஷ்மிகப்3டா---பட்டுத்துணி
சார்ப்பாயி---கட்டில்
ஐஸாவைஸா—சாதாரணமான
ஹோ ஸகேதோ—முடியுமானல்
ஜைஸாகி—போல
யோங்ஹீ—சும்மா
மஹினு—மாதம்
ராத்—இரவு
ஸாம்—மாலை
ஸால்—வருஷம்

## சில வார்த்தைகள்

| | |
|---|---|
| மீட்டேஸே மீட்டே பல் உத்தர் 4பாரத்மே 3பஹுத் மில்தேஹைங் | இனிமையிலும் இனிமையான பழங்கள் வடஇந்தியாவில் அதிகமாய்க் கிடைக்கின்றன. |
| தும்ஹாரா க்யா நாம் ஹை | உன்னுடைய பெயர் என்ன |
| கஹாங்ஸே ஆதே ஹைங் | எங்கேயிருந்து வருகிறீர்கள் |
| கல் கான்பூர்ஸே நிகல்கர் ஆஜ் யஹாங் ஆயே ஹைங் | நேற்று கான்பூரிலிருந்து புறப்பட்டு இன்று இங்கே வந்திருக்கிறோம். |
| ஹமாரே மத்ராஸ் ப்ராந்தமே ரஹ்னேவாலோங்கோ தமில் 3பாஷாஹீ மாலும் ஹை | நம்முடைய சென்னையாகாணத்தில் வசிப்பவர்களுக்கு தமிழ் பாஷை தான் தெரியும். |
| க்யா ஆப் உத்தர் ஹிந்தால் தான்மே 3கயே ஹைங் | தாங்கள் வட இந்தியாவுக்கும் போயிருக்கிறீர்களா? |

ஹாங், 3கயா ஹுங்; பர், 3பஹுத் தினோங்தக் வஹாங் நஹீங் டஹரா; 3தோ மஹினேமே யஹாங் லௌட்4கர் ஆ3கயா; க்யோங்கி, உ4தர் ரஹ்னேவாலே ஸ3ப்லோ3க் ஹிந்தி 4பாஷாஹீ 3போல்தே ஹைங்.

ஆம், போயிருக்கிறேன் ஆனால் அதிகநாள்வரை அங்குதங்கவில்லை; இரண்டு மாதத்தில் இங்கே திரும்பிவந்து விட்டேன். ஏனென்றால் அங்கே வசிக்கிற எல்லா ஜனங்களும் ஹிந்தி பாஷைதான் பேசுகிறார்கள்.

## 7-வது பாடம்

### தொழிலாளிகளின் பெயர்

கிஸான்—குடியானவன்
ஹஜாம்—அம்பட்டன்
ராஜ்—கொத்தன்
ஸோனார்—தட்டான்
சமார்—சக்கிலியன்
4தோ3பி—வண்ணான்
ஹக்கீம்—வைத்தியன்
மஜ்3தூர்—கூலிக்காரன்
3துக்கான்3தார்—கடைக்காரன்

### வியாதிகளும் மருந்துகளும்

3தவா—மருந்து
3புகார்—காய்ச்சல்
ஹைஜா—காலரா
ஸிர்3தர்த—தலைவலி
3தர்த—வலி
அ3த்ரக்—இஞ்சி
3பீமாரி—நோய்
தாஊன்—பிளேக்
2போ3டா—புண்
3கோலி—மாத்திரை
ஸூஜன்—வீக்கம்

### உணவுப்பொருட்கள்

தர்காரி—காய்கறி
ஸோர்3பா—குழம்பு
தமாக்கு—புகையிலை
பான்—வெத்திலை

| | |
|---|---|
| 4பாத்—சாதம் | ஸுபாரி—பாக்கு |
| 3தஹி - தயிர் | நமக்—உப்பு |
| அனுஜ்—தானியம் | உ3ட3த்—உளுந்து |
| 4கீ—நெய் | சனு—கடலை |
| 2சாச், மட்டா—மோர் | ராயி—கடுகு |
| 4தனியா—மல்லி | 4தான்—நெல் |
| ஜீரா—சீரகம் | இம்லி—புளி |
| மிர்ச்சா—மிளகாய் | லஹ்ஸன்—வெள்ளுள்ளி |
| 3கோஸ்த்த—மாமிசம் | மச்லி—மீன் |
| ப்யாஜ்—வெங்காயம் | ஆலு—உருளைக்கிழங்கு |

## உறவினர்

| | |
|---|---|
| மாதா, மாங்—தாயார் | 3பாப்—தகப்பனர் |
| 3படா3பாயி—அண்ணு | 3படி3பஹின்—அக்காள் |
| சோட்டா4பாயி—தம்பி | சோட்டி3பகின்—தங்கை |
| பூப்பா—மாமா | 3புவா—அத்தை |
| 3பேட்டா—மகன் | 3பேட்டி—மகள் |

## வர்த்தகப் பெயர்கள்

| | |
|---|---|
| ஆம்3தனி—வரும்படி | கர்ஜா—கடன் |
| இக்ரார்—எக்ரீமெண்டு | இஜார்—கண்ட்ராக்ட் |
| கிராயா—வாடகை | 2கர்ச்—சிலவு |
| கார்க்கானு—தொழிற்சாலை | 2கரீ3த்தார்—வழக்கமாகவாங்குவோர் |
| தார்—தந்தி | 4தலால்—தரகன் |
| 3தலாலி—கமிஷன் | நக3த்—ரொக்கம் |
| நமூனு—மாதிரி | நிகாஸ்—எற்றுமதி |
| பேஸ்3கீ—முன்பணம் | நிஸான்—அடையாளம் |

புஞ்சி—முதல்
4பாவ்—ரேட்டு, விகிதம்
மஹஸூல், ல3கான்—வரி
வேதன்—சம்பளம்
ஹிஸ்ஸா—பாகம்

3போஜ்—பாரம்
லேன்3தேன்-கொடுக்கல்வாங்கல்
ப்யாஜ்—வட்டி
ஸரீக்,ஹிஸ்ஸே3தார்-கூட்டாளி
ஹிஸாப்—கணக்கு

## தேக உறுப்புகள்

பைர்—கால்
3தில்—இருதயம்
ஆங்க்—கண்
கான்—காது
ஹாத்—கை
நாக்கூன்—நகம்
ஜீ3ப்—நாக்கு
சேஹரா—முகம்
பேட்—வயிறு
கூன்—இரத்தம்

ஸிர்—தலை
ஹதேலீ—உள்ளங்கை
3கர்3தன்—கழுத்து
3கால்—கன்னம்
சம்3டா—தோல்
பட்டா—நரம்பு
சாத்தி—மார்பு
நாக்—மூக்கு
பீட்—முதுகு
உங்லீ—விரல்

## மிருகங்களும் பக்ஷிகளும்

தோத்தா—கிளி
கௌவா—காகம்
சூஹா—எலி
3பில்லீ—பூனை
3க4தா—கழுதை
3பந்3தர்—குரங்கு

ஹாத்தி—யானை
க3பூதர்—புறா
முர்3கா—சாவல்
முர்3கி—கோழி
மச்சர்—கொசு

## திக்குகள்.

பூர3ப்—கிழக்கு
பஸ்ச்சிம்—மேற்கு

உத்தர்—வடக்கு
தக்ஷின்—தெக்கு

## மாதங்கள்

| | |
|---|---|
| சைத்ர—சித்திரை | ஆஸ்வின்—ஐப்பசி |
| வைஸாக்—வைகாசி | கார்த்திக்—கார்த்திகை |
| ஜேட்—ஆனி | மார்4க்கஸீர்ஷ—மார்கழி |
| ஆஷா4ட்—ஆடி | பௌஷ்—தை |
| ஸ்ராவன்—ஆவணி | மா4க்—மாசி |
| 4பாத்ரப3த்—புரட்டாசி | பால்3குன்—பங்குனி |

## எண்கள்.

| | | | |
|---|---|---|---|
| எக் | 1 | 3க்யாரஹ் | 11 |
| 3தோ | 2 | 3பாரஹ் | 12 |
| தீன் | 3 | தேரஹ் | 13 |
| சார் | 4 | சௌதஹ் | 14 |
| பான்ஞ் | 5 | பந்த்ரஹ் | 15 |
| ச்செ | 6 | ஸோலஹ் | 16 |
| ஸாத் | 7 | ஸத்ரஹ் | 17 |
| ஆட் | 8 | அட்டாரஹ் | 18 |
| நௌ | 9 | உன்னீஸ் | 19 |
| 3தஸ் | 10 | 3பீஸ் | 20 |

## வாரங்கள்

| | |
|---|---|
| ரவிவார்—ஞாயிறு | 3குருவார்—வியாழன் |
| ஸோம்வார்—திங்கள் | ஸு3க்ரவார்—வெள்ளி |
| மங்கல்வார்—செவ்வாய் | ஸனிவார்—சனி |
| 3புத்வார்—புதன் | |

இந்த புத்தகத்தின் சகல உரிமைகளும் நமக்குரியவை யானதால், இதைமுழுமையாகவாவது, பிரித்தாவது கூட்டிக்குறைத்தாவது மாற்றியாவது, உத்திரவன்னியில் பிரசுரிக்கக் கூடாதென்பதைத் தெரிவித்துக் கொள்ளுகிறோம்.

NADAR

PRINTING PRESS,

TUTICORIN:-32

57A
4-37

# American Dental Surgery.

## Dr. T. M. OOMMEN L. D. Sc.

Surgeon Dentist, Tuticorin.

சகோதர! சகோதரிகளே!!



அநேக தங்கமெடல்களும் நற்சாக்ஷி பத்திரங்களும் பெற்ற தந்த வைத்திய

டாக்டர், **டி. எம். உம்மன்** எல்.டி.எஸ்ஸி.

அவர்களால்

தூத்துக்குடி பெரிய காட்டன் ரோடு தந்தி ஆபீசுக்கு எதிராக இருக்கும் தந்த வைத்தியசாலையில் அமெரிக்கா தேசத்து நாகரீகப்படி பல் வைத்தியம் செய்யப்படும்,

முகவசிகரத்தை உண்டு பண்ணி பல் வரிசையை விளக்கிக் காட்டுவதும் தற்கால நாகரீகத்துக்கு எற்றவாறு இஞ்சக்ஷன் (Injection) ஊசியின் உதவியால் மருந்தைச் செலுத்தி குணப்படுத்துவதும், பற்கள் பிடுங்குவதில் யாதொரு உபத்திரவமில்லாமலும், பற்களைச்செவ்வையாகத் துலக்கி, அவற்றின் கூறுபாடுகளைக் கண்டுணர்ந்து சிகிச்சைபுரிவதும், பற்களுக்குக் கெட்டியான பசை (Cement) வைப்பதுவும் தங்கம் பீங்கான் முதலியவற்றால் உறுதியான பற்கள் இணைப்பதுவும் ஆகாரங்களை நன்றாய் மென்று சுவைக்கவும், திருத்தமாய் பேசவும், பார்வைக்கு அழகாகவும் இருக்கும்படியான செயற்கை பற்கள் அமைத்துத்தருவதுவும் இத்தந்த வைத்திய சாலையின் நோக்கங்கள்.

☞ டாக்டரிடம் ஆலோசனை கேட்பதற்கு யாதொரு சார்ஜும் இல்லை.